**றம்புக்கன பிரதேச சபை - 2022**

---------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

றம்புக்கன பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் றம்புக்கன பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கைகணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின. கீழான எனது பொறுப்பு,இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில்மேலும்விபரிக்கப்பட்டுள்ளது.எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில்என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் ததுவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிடைக்க வேண்டிய ரூபா 65,500 நீதிமன்றத் தண்டப்பணம் நிதிக்கூற்றுக்களில் விடுபட்டிருந்தது. | 2023 கணக்குகளை தயாரிக்கும் போது சரிசெய்வதாக. | கணக்கை சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 8,990,000 பெறுமதியான ஏக்.03, பர்.27 ஆன 02 காணிகள், ஏக்.03 ரூட் 1, பர்.3 ஆன 08 காணிகள் மற்றும் அளவையிடாத 02 காணிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டில் மேற்கொண்ட நிர்மாணங்களில் ரூபா 1,845,176 ஆன உறுதி செய்யப்பட்ட வேலைப் பெறுமதி கணக்கீடு செய்யப்படவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 05 கணக்கு விடயங்களின் மீதி, அட்டவணைகளுடன் இணக்ஞ் செய்கையில் ரூபா 2,525,986 ஆன வித்தியாசம் நிலவியது. | 2023 கணக்குகளை தயாரிக்கும் போது சரிசெய்வதாக. | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்படும் எண்ணிக்கை மூல ஆவணங்களுடன் இணங்கக் கூடியதாக இருக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத் தொகை ரூபா 57,034,945 ஆன 15 கணக்கு விடயங்களிற்கான அட்டவணைகள் சமர்பிக்கப்படவில்லை. | மேலும் பரீட்சித்து சரிசெய்வதாக. | கணக்காய்விற்கு தேவையான தகவல்களை சமர்பிக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 48,693,369 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 43,946,748 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 13,200,007 | 11,678,914 | 11,090,388 | 6,009,794 | 13,102,889 | 11,407,955 | 9,687,400 | 4,924,113 |
| வாடகை | 14,976,791 | 12,334,931 | 11,159,829 | 3,001,502 | 13,807,050 | 9,419,883 | 9,568,002 | 1,961,549 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,926,510 | 2,194,377 | 2,018,570 | 285,088 | 3,926,510 | 1,401,282 | 1,426,432 | 63,201 |
| ஏனைய வருமானம் | 18,130,973 | 33,689,399 | 72,545,970 | 320 | 36,367,500 | 30,965,885 | 30,945,671 | 320, |
| | 50,234,281 | 59,897,621 | 96,814,757 | 9,296,704 | 67,203,949 | 53,195,005 | 51,627,505 | 6,949,183 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரி, ஏக்கர் வரி, கடை வாடகை, நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் ஆகிய வருமான விடயங்களிலிருந்து 2022 திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 48,412,864 அறவிட வேண்டியதாக காணப்பட்டது. அப் பெறுமதியினுள் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டிற்கு இடையிலான பழைய ரூபா | நிலுவை தொகையை குறைத்துக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுப்பதாக.. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| 14,693,849 ஆன மீதியும், 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 1,914,427 ஆன மீதியும் காணப்பட்டது. | | |
| (ஆ) பிரதேச சபை கட்டிடத்தின் ஒரு பகுதி 02 ஆண்டுகளிற்கு அதிக காலமாக குத்தகை வழங்க நடவடிக்கை எடுக்காததால் ரூபா 3,750,000 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | வங்கியொன்றிற்கு குத்தகை வழங்க பொது சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக. | சொத்துக்கள் பயன்பாடின்றி வைக்கக்கூடாது. |
| (இ) 50 அறிவித்தல் பலகைகளுக்காக ஒரு சதுர அடி ரூபா 150 வீதம் ரூபா 202,725 ஆன கட்டணம் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | விரைவில் அறவிடுமாறு வருமான பரிசோதகர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக. | நிலுவை மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதயன்று 05 ஆண்டுகளிற்கு அதிக காலமாக நிலவிவரும் ரூபா 256,462 ஆன கடன்கொடுனர் மற்றும் ரூபா 9,865,456 ஆன கடன்படுனர்களை தீர்த்திருக்கவில்லை. | மேலும் பரீட்சித்து சரிசெய்வதாக. | நீண்ட காலமாக நிலவிவரும் மீதிகளை இனங்கண்டு தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 30,407,075 பெறுமதியான 20 வாகனங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத பொப்கெட் இயந்திரமொன்றை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுவீகரிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | சுவீகரிப்பு நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) றம்புக்கன, கிரிவல்லாபிட்டியவில் 1986 ஆண்டில நிர்மாணித்திருந்த 04 மாடி கட்டிடமொன்றிற்காக எவ்வித அனுமதியும் இருக்கவில்லை. அங்கு காணப்பட்ட முறையற்ற கழிவு நீர் மற்றும் மலசல வெளியேற்றல் பிரதேச வாசிகளுக்கு அழுத்தத்தை ஏற்படுத்தியிருந்தது. | இக்கட்டிடம் அமைந்துள்ள எமது வீதவரி அதிகார பிரதேசத்திற்கு உட்பட்டதல்ல. எனினும், நிர்மாணம் தொர்பாக பரிசோதித்து தேவையான நடவடிக்கை எடுப்பதாக. | அனுமதியற்ற நிர்மாணம் மற்றும் பொது மக்கள் வசதியீனம் தொடர்பாக கவனத்திற் கொள்ள வேண்டும். |

## 3.3 ஒப்பந்த நிருவாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
| --- | --- | --- |
| பதம்புரய விளையாட்டு மைதானத்தில் புல்நடும் வேலைகள் பூர்த்தியானவுடனே, 03 மாத பராமரிப்பு காலத்தின் பின்னர் செலுத்த வேண்டிய ரூபா 378,315 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக பராமரிப்பு வேலைகள் இடம்பெறாததால் அனேகமான இடங்கள் பரள்கொண்டதாக காணப்பட்டதுடன், புற்கள் மஞ்சல் நிறத்தில் காணப்பட்டன. அவ்வாறே, விளையாட்டு மைதானத்தில் நீர் வழங்கல் காணப்பட்ட போதும் வெளியிலிருந்து நீரை கொண்டுவர கொடுப்பனவு செய்தமை பிரச்சினைக்குரிதானது. | இறுதிப் பட்டியலிற்கு நிறுத்தற் பணம் உட்படவிலிலை எனவும், உரியவாறு பராமரிப் செய்யப்பட்டுள்ளதாகவும், பராமரிப்பு காலத்தின் பின் மீண்டும் வாடகைக்கு வழங்கியதால் இந்நிலை ஏற்பட்டதுடன், எதிர்காலத்தில் பராமரிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். வியைபாட்டு மைதானத்ினுள் நீர் வழங்கல் போதியதாக இல்லாததால் நீரை வெளியிலிருந்து கொண்டு வரவதனை மதிப்பீட்டிற்கு உட்படுத்தியதாக. | வேலைகளை ஒப்பந்த பிரகாரம் மேற்கொண்ட பின்னர் கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
| --- | --- | --- |
| அங்கீகார ஆளணியில் 32 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 04 கள தொழிலாளர்கள் வருமான பரிசோதகர் மற்றும் சாரதி போன்ற பதவிகளுக்கு இணைக்கப்பட்டிருந்தனர். 04 அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மிகை காணப்பட்டது. | வெற்றிடம் பூரணப்படாமை இதற்கு காரணமாக இருந்தது. | தேவைபாட்டின் மீது வெற்றிடங்களை நிரப்பவும், ஆக்கபூர்வமாக இணைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும. |